DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, PONNERI

| | |
|---|---|
| Case No. | : S. T. C. No. 518/2024 |
| Prosecution Witness | : P. W. 1 |

| | | | |
|---|---|---|---|
| Name | : சதீஷ்பாபு | | : |
| Father / Husband Name | : | | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the day of 03/11/2025

Accused Present.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)**

இந்த நீதிமன்றத்தில் 2 வழக்குகள் தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரிதான். என்ன தொழில் செய்கிறேன் என்றால், அரிசி வியாபாரம் செய்கிறேன். நான் சொந்தமாக அரிசி அரைக்கும் ஆலை வைத்திருக்கிறேன் என்றால், என் தந்தை நடத்தி வருகிறார். அதன் பெயர் சுபாஷினி அரிசி ஆலை ஆகும். அதனை நானும் என் தந்தையும் தான் பார்த்து வருகிறோம் என்றால் சரிதான். அதைத்தவிர எங்களுக்கு ஆஞ்சநேயா நெல் மண்டி என்றும் ஒன்று உள்ளது என்றால் சரிதான். செங்குன்றம் பகுதியில் அரிசி மற்றும் நெல் வாங்கி தருவதற்கு முகவர்கள் நிறைய பேர் உள்ளார்கள் என்றால் சரிதான். ஒவ்வொரு அரிசி தயாரிப்பாளர்களும் ஒவ்வொரு பிராண்ட் வைத்திருப்பார்கள் என்றால் சரிதான். எங்கள் அரிசி பிராண்ட் பெயர் என்றால், JPS Lakshmi Brand ஆகும். அரிசிக்கு ஜிஎஸ்டி வரி போடுகிறார்களா என்றால், சரிதான். நானும் மற்ற வியாபாரிகளும் அரிசியை விற்பனை செய்யும் போது ஜிஎஸ்டி வரி எண் போட்டு விற்பனை செய்வோம் என்றால் சரிதான். எங்கள் வியாபார டர்ன்ஓவர் மாதம் எவ்வளவு

SHANKARAN MANJULA Digitally signed by SHANKARAN MANJULA Date: 2025.11.03 13:17:08 +0530

என்றால், ரூ.25 லட்சம் வரை வரும். வருடம் ரூ.3 கோடி வரை வரும் என்றால் சரிதான். எங்கள் அரிசி ஆலைக்கும் நெல் பிராண்டுக்கும் எப்போதிலிருந்து ஜிஎஸ்டி வரி தாக்கல் செய்து வருகிறோம் என்றால், 2024லிருந்து தாக்கல் செய்கிறோம். அந்த ஜிஎஸ்டி வரி எண் பெற்றதற்கு எங்களுக்கு கொடுத்த ஆவணத்தை வழக்கில் தாக்கல் செய்ய முடியுமா என்றால், தேவைப்பட்டால் தாக்கல் செய்வேன். மில்லுக்கு யார் பெயரில் ஜிஎஸ்டி என்றால், என் தந்தை பெயரில் வருகிறது. அரிசி பிராண்டுக்கு யார் பெயரில் வருகிறது என்றால், என் பெயரில் வருகிறது. ஜிஎஸ்டி அமல்படுத்தப்பட்ட ஆண்டிலிருந்து நான் அரிசி வியாபாரம் செய்கிறேன் என்றால், அதற்கு முன்பிலிருந்து செய்து வருகிறேன். அரிசி பிராண்டு செய்து நேரடியாகவும், முகவர்கள் மூலமாகவும், அதனை விற்பனை செய்கிறேன் என்றால் சரிதான். அந்த முகவர்கள் பல்வேறு கடைகளிலிருந்து தேவையான ஆர்டர்களை பெற்று தரும் போது அதனை நாங்கள் சப்ளை செய்வோம் என்றால் சரிதான். அப்படி சில்லறை அல்லது மொத்த அரிசி வியாபாரிகள் அதேபோல் எங்களைப் போல் கொள்முதல் செய்து வியாபாரம் செய்பவர்களுக்கு பாக்கி இருந்து கொண்டே இருக்கும் என்றால் சரிதான். அரிசி முகவர்களிடம் நாங்கள் பொறுப்புறுதிக்காக ஆவணங்கள் பெற்று வைத்துக் கொள்வோம் என்றால், சரிதான். அதே மாதிரி தான் எதிரியும் எங்களிடம் ஏஜெண்டாக வேலை செய்யும் போது பொறுப்புறுதிக்காக கொடுத்த ஆவணங்களை நான் தவறாக பயன்படுத்தி இந்த வழக்கை போட்டிருக்கிறேன் என்றால், சரியல்ல. ஒரு காசோலை தான் பொறுப்புறுதியாக வாங்கி வைத்துக் கொள்வார்கள். ஆனால், எதிரி 5 காசோலைகள் கொடுத்திருக்கிறார். என்னுடைய பிரமாணத்தில் 5 காசோலைகள் எதிரி கொடுத்த விவரத்தினை சொல்லவில்லை என்றால், சரிதான். இந்த வழக்கு தாக்கல் செய்யும் போதே என்னிடம் எதிரி கொடுத்த 5 காசோலைகள் இருந்தது என்றால்,

SHANKARAN MANJULA Digitally signed by SHANKARAN MANJULA Date: 2025.11.03 13:17:18 +0530

சரிதான். இந்த வழக்கில் மசா.ஆ.5 நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பிற்கு எதிரி தரப்பில் எனக்கும் என் வழக்கறிஞருக்கும் பதிலறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். அந்த பதிலறிவிப்பு மசா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அந்த மசா.ஆ.7ல் எதிரி தரப்பில் விளக்கமாக எதிரியானவர் ரூ.12 வீதம் ஒரு மூட்டைக்கு கமிஷன் ஏஜெண்டாக இருந்து செயல்பட்டு வந்தார், பொதுவாக பொறுப்புறுதிக்காக கொடுக்கப்படும், பொறுப்புறுதி காசோலைகளை வைத்து எவ்வளவு அரிசி மூட்டைகள் எவ்வளவு ரூபாய்க்கு எதிரி கடனுக்காக பெற்று சென்றார் போன்ற விவரங்கள் எதுவும் தெரிவிக்காமல் சாதாரணமாக எதிரி கொடுத்த 5 காசோலைகளில் 2 காசோலைகளை எந்தவித ஒப்புதலும் எதிரியிடம் பெறாமல், பகுதியான சட்டப்பூர்வ கடப்பாடு அல்லது முழுமையான சட்டப்பூர்வ கடப்பாடுக்கா என்று தெரிவிக்காமல், மோசடியாக அந்த 2 காசோலைகளை மற்றும் வழக்கில் சொல்லப்படாத 3 காசோலைகளான யூனியன் பாங்க் ஆப் இந்தியாவில் காசோலை எண்.030067 முதல் 030069 வரை உள்ள காசோலைகளை திருப்பி தர வேண்டி பதிலறிவிப்பு அனுப்பப்பட்டிருக்கிறது என்றால், சரிதான். அந்த மசா.ஆ–7க்கு பதிலறிவிப்பு என் தரப்பில் கொடுக்கப்படவில்லை என்றால் சரிதான்.

SHANKARAN MANJULA

Digitally signed by SHANKARAN MANJULA
Date: 2025.11.03 13:17:29 +0530